1990 ஏப்ரல் 17] [பேராசிரியர் க. பொன்னுசாமி]

மாதம் ஒரு புதிய தொழிற்சாலை என்று சொன்னீர்கள்; 5 மாதங்களிலே எத்தனை தொழிற்சாலைகள் என்று தெரியவில்லை, மூடப்பட்ட தொழிற்சாலைகள் எத்தனை திறந்திருக்கிறீர்கள் என்று தெரியவில்லை. ஆனால், அதிக மான தொழிற்சாலைகள் மூடப்பட்டுக் கொண்டு வருகின்றன என்பதையும் கவனத்தில் கொண்டு, தொழில்துறையை முன்னேற்றுவதற்குத் தக்க முடிவுகளையும், நடவடிக்கை களையும் மேற்கொள்ள வேண்டுமென்று கேட்டு வாய்ப்புக்கு நன்றி சொல்லி அமைகிறேன். நன்றி. வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு ஒரு சிறிய விளக்கத்திற்காகச் சொல்கிறேன். அவர் என்னிடத்திலே வந்து கேட்டபோது; சில ஆதாரங் களையும் காட்டினார். அவையிலே எழுப்புவதற்கு நான் முழு வாய்ப்பும் அளித்திருக்கிறேன். நம்முடைய முதலமைச்சர் அவர்கள் அது தொடர்பான மூலக் கடிதத்தைக் கொடுத்தால், தக்க நடவடிக்கை எடுப்பதாகச் சொல் கிறார்கள். எனவே, உறுப்பினர் அவர்கள் எந்த அளவுக்கு தனக்கு இருக்கிற பங்கு. வாய்ப்பை அரசுக்கு உணர்த்தி, சில் நல்ல செயல்களைச் செய்வதற்குத் தூண்டுகோலாக இருக்க வேண்டும் என்ற உணர்வோடு செயல்படுகிறாரோ, அதே உணர் வோடு அந்த மூலக் கடிதத்தையும் தக்க நேரத்தில் கொடுத்து உரிய நடவடிக்கைக்கு அவர்கள் ஏற்பாடு செய்ய வேண்டுமென்று வேண்டுகோள் விடுக்கிறேன்.

பேரவையின் இன்றைய அலுவல்கள் இத்துடன் முடிவுற்று, நாளை (18–4–1990) காலை 9-00 மணிக்குப் பேரவை மீண்டும் கூடும்.

பின்னர் பேரவை 13-10 மணிக்கு ஒத்திவைக்கப் பெற்றது.

7. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்.

அ. சட்டபடிக்கான விதிகளும் ஆணைகளும்.

62. 1959-ஆம் ஆண்டு தமிழ்நாடு தொழில் நிறுவனங்கள் (தேசிய மற்றும் பண்டிகை விடுமுறைகள்) விதிகளில் சில திருத்தங்கள் செய்வது குறித்து தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறையின் 1990-ஆம் ஆண்டு ஜனவரி திங்கள் 18-ஆம் நாளிட்ட 88-ஆம் எண் அரசாணையில் வெளியிடப் பட்ட அறிவிக்கை 1958-ஆம் ஆண்டு தமிழ்நாடு தொழில் நிறுவனங்கள் (தேசிய மற்றும் பண்டிகை விடுமுறைகள்) சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 33/1958) 12(3) பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.

63. 1981-ஆம் ஆண்டு தமிழ்நாடு இந்தியாவில் தயாரிக்கப்படும் அயல்நாட்டு சாராவிகள் (தயாரிப்பு) விதிகளில் திருத்தமொன்று செய்வது குறித்து, உள், மதுவிலக்கு, ஆயத்தீர்வைத் துறையின் 1990-ஆம் ஆண்டு பிப்ரவரி திங்கள் 3-ஆம் நாளிட்ட 168-ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை 1937-ஆம் ஆண்டு தமிழ்நாடு மதுவிலக்குச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 10/1937) 54(3) பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.)

ஆ. அறிக்கைகள், அறிவிக்கைகள், ஏனைய தாள்கள்.

98. கோரிக்கை எண் 24—பெருந்தொழில்கள் பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 1990–91 (தமிழ், ஆங்கிலம்).

99. சர்க்கரைத் துறை பற்றிய செயல்முறைத் திட்டம் 1990–91(தமிழ், ஆங்கிலம்).

100. தொழில்கள் பற்றிய சாதனைத் திட்டம், 1990–91 (தமிழ், ஆங்கிலம்).

101. புவியியல் மற்றும் சுரங்கத் துறை பற்றிய செயலாக்கத் திட்டம், 1990–91 (தமிழ், ஆங்கிலம்).

102. "தமிழ்நாட்டில் தலைமைக் கூட்டுறவுச் சங்கங்கள்" என்கிற புத்தகம்.

103. பொதுக் கணக்குக் குழுவின் முப்பத்தொன்பதாவது அறிக்கை, 1989–90.

104. உடுக்குறியிடப்பெறாத வினாக்களும், விடைகளும் (ஐந்தாவது பட்டியல்) (எண்கள் 1 முதல் 50 வரை.)

105. உடுக்குறியிடப் பெறாத வினாக்களும், விடைகளும் (ஆறாவது பட்டியல்) (எண்கள் 1 முதல் 50 வரை).

இணைப்புகள்

(.... 114ஆம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க)

1990-91ஆம் ஆண்டுக்கான பெருந்தொழில்கள் பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு.

இந்த அரசு, தமிழ்நாட்டைப் தொழில் மயமாக்குவதற்கு மேற்கொண்ட புதிய முயற்சியானது தொழில் முனைவோர்களிடம் பேரார்வத்தையும் விருப்பத்தையும் ஏற்படுத்தி உள்ளது. தமிழ்நாடு தொழில் முதலீட்டு நிறுவனம் (டி.ஐ.ஐ.சி.) மற்றும் தமிழ்நாடு தொழில் முன்னேற்ற